**செய்தி வெளியீடு எண். 831** **நாள்.13.11.2009**

**தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் குழந்தைகள் தினவிழா 14.11.2009 அன்று சென்னையில் மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.**

தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் "பாரத ரத்னா", "மனிதருள் மாணிக்கம்" பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாள், குழந்தைகள் தின விழாவாக 14.11.2009 (சனிக்கிழமை) மாலை 3 மணிக்கு சென்னை, சாந்தோம் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள் தலைமையில் சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.

பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் முனைவர் பெ.பெருமாள்சாமி அவர்கள் வரவேற்புரையாற்ற உள்ளார்கள்.

அனைவருக்கும் கல்வி இயக்ககத்தின் மாநில திட்ட இயக்குநர் திரு.இரா.வெங்கடேசன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையுரையாற்ற உள்ளார்கள்.

பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலர் திரு.எம்.குற்றாலிங்கம், இ.ஆ.ப. அவர்கள் தலைமையுரையாற்ற உள்ளார்கள்.

இவ்விழாவில், பள்ளி மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள் மாணவ மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கி, விழாப் பேருரையாற்றவுள்ளார்கள்.

தொடக்கக் கல்வி இயக்குநர் திரு.கு.தேவராஜன் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் இயக்குநர் திரு.ப.மணி ஆகியோர் வாழ்த்துரை வழங்க உள்ளார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர் திரு.பூ.அ.நரேஷ் அவர்கள் நன்றியுரையாற்ற உள்ளார்கள்.

இவ்விழாவில் அனைவரும் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பிக்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் பெ.பெருமாள்சாமி அவர்கள் அன்புடன் அழைக்கிறார்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.